614

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

10 SEP 1945
MADRAS
614

Editor [illegible] Lourduswami, B.A., L.T.
Publi[illegible]
R[illegible]ining School, Trichinopoly.

JL
Ꮍ211, N11PP
N45:36·3
189996

[illegible] செப்டெம்பர் 1945 மலர் 3

[illegible] முறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 36]   15 செப்டெம்பர் 1945   [மலர் 3

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை 1946. சென்ற T. S. L. C. பரீட்சையிலும் முந்திய வருஷங்களிலும் பரீட்சையில் தவறிப்போன நம் பழைய மாணவர்கள், 1946-ம் ஹு மார்ச்சு மாதத்தில் நடைபெறும் ஷை பரீட்சையில் மறுபடி எழுதவேண்டியவர்களாவர். அதற்கு அடுத்த அக்டோபர்-மீ 13-ம் தேதிக்குள் (13-10-45) பரீட்சைக் கட்டணம் இதனடியில் குறித்துள்ளபடி இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பிவைக்கவேண்டும். அதோடு எந்த "ஸெண்டரில்" (center) பரீட்சை எழுத அவரவர்க்கு விருப்பம் என்பதையும் தெரிவித்துவிடவேண்டும்—அறியவும். ஷை பரீட்சைக் கட்டண விவரம் பின்வருமாறு:—

ஸெக்கண்டரி கிரேடு.—ஒரு பாடம் (Single subject) அல்லது ஒரு "க்ரூப்" (Single group) மாத்திரம் தவறிப்போய் அதில் பரீட்சை எழுதக் கட்டணம் ரூ. **5—0—0.**

ஒரு பாடத்திற்கு மேற்பட்ட பாடங்களில் தவறிப்போயிருந்தாலும், ஒரு "க்ரூப்புக்கு" மேற்பட்டு, அந்தப் பாடங்களில் தவறிப் போயிருந்தாலும், பரீட்சை எழுதக் கட்டணம் ரூ. **10—0—0.**

எலிமெண்டரி கிரேடு.—மேலே கூறியிருப்பதுபோல, ஒரு பாடம், அல்லது ஒரு 'க்ரூப்' மாத்திரம் தவறியிருந்தால், எழுத கட்டணம் ரூ. **3—0—0.**

ஒரு பாடத்துக்கு மேற்பட்ட பாடங்களில் தவறிப்போயிருந்தாலும் அல்லது ஒரு "க்ரூப்புக்கு" மேற்பட்ட பாடங்களில் தவறிப் போயிருந்தாலும், பரீட்சை எழுதக் கட்டணம் ரூ. **6—0—0.**

WANTED two Secondary Grade Trained Teachers for R. C. Secondary Training School, Trichinopoly on Rs. 30 plus Rs. 10 dearness allowance. Post permanent.

Apply immediately,

The Headmaster,

R. C. Secondary Training School,

Trichinopoly.

614

போதனாமுறையும் பவணந்தி முனியும்

(M. A. S. Tamil Pandit)

(கொத்து 36, மலர் 2, பக்கம் 24-ன் தொடர்ச்சி.)

நம் பண்டைத் தமிழ்நாட்டில் நம் பண்டைத் தமிழ்வல்லார் தமிழ்மொழியைத் தமிழ் நூல் கற்க விரும்பியவர்க்கு எங்ஙனம் எம்முறைபற்றிப் போதித்தனர் என்பதை ஆராய்ந்துபார்க்குமிடத்து அநேக உண்மைகள் புலனாகின்றன. இக்காலத்தைப்போன்று கற்பித்தற்றொழிலை மேற்கொண்டவர், கொள்ளாதவர் என்ற பாகுபாடு அக்காலத்தில் இருந்ததில்லை. ஒருவனை கலைஞன் அல்லது கல்விமான் என்று சொல்லப்பட விரும்புவானாகில் அவனிடத்து நான்குவகைப் பண்புகள் இன்றியமையாதிருத்தல் வேண்டும்.

1. அவன் அவன் வதியும் காலதேச வர்த்தமானங்கட்கியைய, மிக வுயர்ந்த பொருத்தமாகிய நூல்களைக் கற்கவேண்டும். 2. அவ்வாறு கற்றவற்றை அந்நூல்வலார் பலரோடுங்கூட்டி ஆராய்தல் வேண்டும். 3. ஆராய்ந்து தெளிந்தபின்னர் அந்நூல்களிற் கூறப்பட்ட நெறிப்படி ஒழுகுதல் வேண்டும். 4. அவ்வொழுக்கத்திற் சிறந்த பின்னர் அந்நூலைக் கற்றற்குரியவர் பலர்க்கும் போதித்தல் வேண்டும். இவை உடையாரே அக்காலையிற் கல்விமான் என்று மதிக்கப்பட்டவராவர்.

189996

எனவே கற்றற்றொழிலை மேற்கொண்டவர் யாவரும் கற்றவற்றைப் போதிக்கவும் ஆற்றல் உடையவர் ஆதல்வேண்டும் என்பதே அக்காலத்து ஆன்றோர் கொள்கைகளாகும். அக்கொள்கைகட்கு ஏற்பவே பாடத்திட்டங்களையும் அமைத்திருந்தனர். அப்போதனா முறைதானும் பெரும்பாலும் இலக்கண நூல்களிலேயே அமைத்து வைக்கப்பெற்றிருந்தன. தாம் நிறைந்த அறிவைப் பெற்றபின்னரே அதனைப் பிறர்க்கு அறிவுறுத்தல் கூடும் என்பதை உணர்ந்தே அவ்விலக்கண நூல்களை அறிதற்கு முன்னரே இலக்கிய அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதன்பொருட்டு இலக்கியமுணர்ந்து அதற்கு இலக்கணமியம்பல்வேண்டும் என்றனர். இலக்கணம் மிக அவசியம் என்பதன்பொருட்டே, "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனவும், "எழுத்தறியார் கல்விப்பெருக்கமனைத்தும், எழுத்தறிவார்க் காணிலையாம்" எனவும் பிறவாறும் கூறி இருக்கின்றனர். எனவே கற்பார்க்கு இலக்கிய அறிவை முதற்கண் ஊட்டி, அவ்விலக்கியத் தெளிவுற்றபின்னர் இலக்கண அறிவைப் புகட்டி, இவ்விரு தகுதியும் பெறுங்காலையிலேயே போதனாசக்தியும் பயில்வார்க்கு ஊட்டினர். ஆக அப்போதனாமுறைகள் பற்பல நூலகத்துக் கூறப்பட்டிருப்பினும், பவணந்தியார் கூறியவற்றையே யாம் விளக்குவாம்.

(தொடரும்.)

பாடக் குறிப்பு

(S. Susaikannu)

3-வது வகுப்பு: இயற்கைப்பாடம்.

நோக்கம்: தோட்டத்தின் நண்பர்களும் சத்துருக்களும் என்ற பாடத்தின்மூலம் மாணவர்களை இயற்கைப்பொருள்களை உற்றுநோக்கச் செய்தல்.

உபகரணம்: பாடசாலைத் தோட்டம் — மண்புழு, தேனீ, வண்ணாத்திப்பூச்சி, கம்பளிப்பூச்சி, அசுவணிகள், பச்சைப்புழு, வெட்டுக்கிளி, கரையான் (வெள்ளை எறும்பு) முதலியன.

விஷயம்.	முறை.
அ பீடிகை: சிநேகிதன், சத்துருக்கள். நன்மைசெய்பவன் நண்பன். தின்மைசெய்பவன் சத்துரு.	உனக்குச் சிநேகிதன் யார்? அவன் உனக்கு நன்மை செய்வானா துன்பம் செய்வானா? இதேமாதிரி தோட்டத்திலுள்ள செடிகளுக்கு நன்மைசெய்பவன் நண்பன் தீங்குசெய்வன சத்துருக்கள்.

நோக்கவெளியீடு: இன்று தோட்டத்தின் நண்பர்களைப்பற்றியும் சத்துருக்களைப்பற்றியும் பார்ப்போம்.

புது விஷயம்.	
மண்புழு: இது பூமிக்குள் வளை தோண்டிக்கொண்டு இருக்கும். கீழேயுள்ள மண்ணை வெளியே கொண்டுவந்து போடுகிறது. இதனால் கீழ்மண்ணை மேல்மண்ணாக்குகின்றது. உழவனின் உபகாரி. நண்பன்.	தோட்டத்திற்கு அழைத்துச் சென்று போதிப்பேன். ஷ புழுவைக் கொண்டுவந்து காண்பிப்பேன். அது பூமியில் வளை தோண்டுவதைக்காண்பிப்பேன். உழவன் என்ன செய்கிறான்? கலப்பையைக்கொண்டு கீழ் மண்ணை மேல்மண்ணாக்குகின்றான்.
தேனீ, வண்ணாத்திப்பூச்சி: இவைகள் ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவிற்குச் சென்று தேன் உறிஞ்சும்பொழுது ஒரு பூவிலுள்ள மகரந்தப்பொடிகளை கால்களில் ஒட்டிக்கொண்டு மற்றொரு பூவிற்குள் மகரந்தம் கலக்கிறது. இதனால் அப்பூவில் பிஞ்சு, காய் உண்டாகிறது. இதனால், நண்பன்.	தோட்டத்திற்கு அழைத்துச் சென்று தேனீ செய்யும் வேலையை உற்றுநோக்கச்செய்வேன். பூக்களைக் காண்பித்து விஷயத்தை விளக்குவேன்.

கம்பளிப்பூச்சி: வெட்டுக்கிளி, அசுவணி முதலிய பூச்சிகள் செடிகளில் உட்கார்ந்து இலைகளைத் தின்றுவிடும். இதனால் தோட்டத்திற்கு தீங்கு உண்டாகும். இவைகள் சத்துருக்கள்.

கரையான், கீழெலி: இவைகள் பூமிக்குள் வளை தோண்டிக்கொண்டு செடிகளின் வேர்களைத் தின்றும், கத்தரித்தும்விடும். இதனால் செடி வாடிப்போகும். இவைகள் சத்துருக்கள்.

ஒவ்வொரு பூச்சிகளையும் நிதரிசனமாகக் காண்பித்து அவைகள் சேதம் செய்யப்பட்ட செடிகளின் இலைகளைக் காண்பிப்பேன். அவைகள் எப்படி தின்கின்றன என்பதை வாயின் பாகங்களை க.ப. வில் வரைந்து காண்பிப்பேன்.

கரையான் புத்துக்களையும் கீழ் எலி வாழும் வளைகளையும் காண்பிப்பேன்.

திருப்பிப்பார்த்தல்:—

க. ப. சுருக்கம்.

சத்துரு.	நண்பன்.
கம்பளிப்பூச்சி	தேனீ
வெட்டுக்கிளி	மண்புழு
அசுவணி	சிட்டுக்குருவி
கரையான்	வண்ணாத்திப்பூச்சி
கீழெலி	

அப்பியாசம்:—

1. தோட்டத்திற்கு நண்பனாக இருக்கக்கூடிய ஜந்துக்கள் அல்லது உயிர்பிராணிகள் யாவை?
2. தோட்டத்திற்குச் சத்துருவாக இருக்கும் உயிர்ப்பிராணிகள் யாவை?
3. மண்புழுவினால் தோட்டத்திற்கு என்ன உதவி?
4. தேனீயின் உதவி என்ன?
5. வெட்டுக்கிளியின் வாய் பயிர்களை வெட்டுவதற்கு எப்படி அமைந்திருக்கிறது?

போலீஸ்காரன்: இந்தக் கைதி வெகுநாள் திருடனுங்க: பிடிக்கிறது ரொம்ப கஷ்டமாப் போச்சுதுங்க.

இன்ஸ்பெக்டர்: (கைதியைப் பார்த்து) அப்படித்தானடா?

கைதி: எல்லாம் முன்னாலே சொன்ன எஜமான் உதவியினாலே தானுங்க.

(J. Arokiasamy.)

கொலை காத்த கலை

(D. Nathamuni, T. P.)

சோழ குலத்தையே நடுநடுங்கச் செய்துவந்தான் மறவர்குலத் தோன்றல் மலையமான் திருமுடிக்காரி. கிள்ளி அவனை ஓர் போரில் கொன்று அவனுடைய இரண்டு பிள்ளைகளையும் சிறைப்படுத்தினான். இவ்விருவரையும் கொன்று தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள நெஞ்சம்கொண்டான் வளவன். மறுநாள் மக்களெல்லாம் சூழ்ந்து காண மன்னர் குமரர் இருவரையும் யானையால் கொல்லுமாறு வளவன் ஏவினான். செய்வது அறியாச் சிறியவர் தம் நிலைகண்டு, மக்கள் மனம் கலங்கினர். கலங்கி ஆவது ஏன்? மன்னன் உரைத்த மாற்றத்திற்கு மறுமாற்றம் கூறவல்லார் யார்?

அந்நிலையில் அவண் தோன்றினார் புலவர் கோவூர் கிழார். புலவர் பெரும! வருக! வருக!! என வளவன் வாயார அழைத்ததெல்லாம் அவர் செவியில் படவில்லை. காமனைப் பழிக்கும் காளையர் இருவரையும், அவர் எதிரே நிற்கும் கூற்றத்தனையதோர் கொல்களிற்றையுமே நோக்கியவராய் மன்னனைக் குறுகி 'அரசே! என்ன காரியம் செய்யத் துணிந்தனை? என்றனர். செவியுற்ற வளவன் 'புலவர்பெரும! மால்வரை என்னத்தோன்றும் இம்மதயானைகண்டும் அஞ்சா இம்மறக் குடிச் சிறார்களை இன்னர் என்றெண்ணி வாளா விடுதுமாயின் நாளை என்னனைய மன்னரெல்லாம் தன்னடிபணியும் மன்னராவது திண்ணம். ஆதலின் இக்கொடியோரைக் கொன்று வான்புகழ்படைத்த இவ்வளவர் குலப்பெருமையையும் எதிர்கால நலனையும் காவாதொழியேன்' என்றனன்.

கேட்ட புலவர் "ஏ! வளவ நீ எண்ணும் வண்ணம் இவர்கள் கொடுமையே உருவாய் வந்த கொற்றவர் குலத்தினர் அல்லர். பசிப்பிணிக்கிரங்கும் பாவலர், தம் துன்பம் காணவல்லாதவராய் தாம் உண்ண இருக்கும் உணவை அவர்களோடு பங்கிட்டுண்ணும் பான்மையாளர். நீயோ அடைக்கலம் புக்க புறாவின் அல்லல் கண்டு தன் ஆருயிர் வழங்கிய வளவர்குலத் தோன்றல். புலவர்க்கிரங்கும் இப் புன்கணாளரைக் கொல்வதால் வரும் இப்பழி நின்னொடு ஒழிவதன்று. புலவர்கள் உள்ளளவும் நின்குலம் உள்ளளவும் ஒழியாது. ஆதலின் எந்த குலத்தின் பெருமையைக் காப்பதாக எண்ணுகின்றனையோ அக் குலத்திற்கே என்றுமில்லாப் பழியைத் தேடுகின்றாய் என்பதை உணர்வாய். வீரமும் புலமையும் ஒருங்கே வாய்ந்த கிள்ளியே நின்னை நாளை ஒருவர் எள்ளுதல் காண என் மனம் இசையவில்லை. யான் சொல்லவ சொன்னேன். மற்றவர் தமக்கு நீ செய்வ செய்க" என்றவளவில் வளவன் வணங்கிய தலையனாய்ப் புலவர் பெரும! பொறுத்தருள்க. அடங்காக் கோபத்தால் அழிவைத்தேடிய அடியேனைக் காத்தளித்த நுமக்கு யான் என்ன கைமாறு செய்யவல்லேன்? என்று கூறி புலவ

லைத் தழுவிக்கொண்டான். இளவரசர் இருவரும் தம் நாடு சேர்ந்தனர். முன்னொருநாள் தம் தந்தை உணவளித்துக் காத்த புலமை பின்னொருநாள் தமக்குயிரளித்த பெருமைகண்டு பேருவகைகொண்டனர்.

பகை நாட்டிலே பிறந்ததாகிய ஒரே குற்றத்திற்காக மாநிலம் போற்றும் மன்னனாகினும் சரி உலகம் போற்றும் உத்தமனாகிலும் சரி கருத்திற் சிறந்த கலைஞனாயினும் சரி அவனைக் கொலைத்தண்டனைக்குள்ளாக்கும் கொடுமையே அரச நீதி என்று கூறும் அறிவின்மை அக்காலத்தும் இல்லாமல் இல்லை. கலையைக் கண்ணெனக் காத்த அக்காலக் காவலர்கள் கலைஞர்களைத் துணைகொண்டு வந்தமையால் அத்தகைய அநீதிகளினின்றும் காப்பாற்றப்பட்டுவந்தனர்.

விடுகதைகள்

இது என்ன?

1. உரித்தகுருவி ஊருக்குப்போகிறது. (A. Sammanasu)

2. பட்டமரம் தளிர்க்கக் கண்டீரோ மந்திரி? தளிர்த்த மரம் பழம் பழுக்கக் கண்டேனே, ராஜாவே! (S. Arokiasamy)

3. அடியடா, பிடியடா என்கிறான்; வெளியே வரமாட்டான். (S. Arulanandam)

4. கூடைநிறையப் பூ இருக்கிறது; விடிந்து பார்த்தால் காணவில்லை. (M. Packiam)

5. ஆயிரம் தச்சர்கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவர் கண்பட்டு உடைந்ததாம் அம்மண்டபம். (M. Veeramuthu)

6. காவிரியிடையிற் பூக்கும் கன்றுகட்குணவே யாகும்
பூவிரி பரப்பிலெல்லாம் பூத்திடும் புட்பமல்ல
விண்மழைத் துளிக்கோரீட்டம் வெண்மையும் [மென்மையுமாம்
கண்ணினால் காண்பாம் ஆர்ஸி போதனு சாலையோரம்.
(I. Sammanasu.)

பிறந்த நாள்

(G. S. William Doraisami)

சிறு கதை

ஞாயிற்றுக்கிழமை காலை கதிரவன் தனது செங்கதிர்களைப் பரப்பிக் கொண்டு மெதுவாக வானத்தில் எழுந்தான். காகங்களும், பறவைகளும், தங்கள் தங்களது இனிய குரலால் பகல் பொழுதை அழைத்தன. மாதாக்கோவில் மணிகள்எல்லாம் "இரட்சிப்பின்சந்தோஷத்தை காண வா" என்று அழைப்பதுபோல் "கிணீர், கிணீர்" என்று ஓசை செய்தது. கிருஷ்ணகிரி பட்டணத்தில் உள்ள "ராஜபவன்" பங்களாவில் அநேகர் தங்கள் கைகளில் ஒவ்வொரு உயர்ந்த பொருளை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைவதும், சிலர் தேங்காய், பழம், பூ, சந்தனங்களோடு வெளியே வருவதுமாய் இருந்தார்கள். பங்களாவில் இருந்து இன்னிசைக் கீதங்களோடு சுகந்த வாசனையும் கலந்து வந்துகொண்டிருந்தது. இவ்வளவுக்கும் காரணம் அன்றையதினம் Mr. D. ராஜ் I. C. S., கிருஷ்ணா ஜில்லா கலெக்டர், அவர்களது ஏக புத்திரன் சேகரனின் முதல் ஆண்டு பிறந்தநாள் கொண்டாட்டம்தான்.

வெகுநாள் புத்திரபாக்கியம் இல்லாதிருந்த அவர் தனது அந்திய காலத்தில் அடைந்த புத்திரனது முதல் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட நினைத்து, அதன்படியே தனது உற்றார், உறவினர், சிநேகிதர் எல்லோருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பி இருந்தார். அதனால்தான் அன்று அவர் வீட்டில் அதிக உற்சாகமும், சந்தோஷமும், மங்கள ஒலியும் தாண்டவமாடியது. கலெக்டர் அவர்கள் எல்லோரையும் உபசரித்து அனுப்பியபின் தமது குடும்பத்தோடு அன்று கோயிலுக்குச் சென்று "பூசை" கண்டு திரும்பிவந்து ஒருகப் காப்பி சாப்பிட்டுவிட்டு அலுப்பால் பக்கத்தில் இருந்த சாய்மான நாற்காலியில் சற்று சாய்ந்தார்.

எதிரே அவரது பத்தினி தனது மகவுடன் அதிக அன்பாக கொஞ்சிக்கொண்டிருந்தாள். அதைப்பார்த்து அவரது உள்ளம் அவரைத்தனது பழைய நினைவுகளுக்கு இழுத்துச் சென்றது.

பூஞ்சோலை என்ற ஓர் கிராமம் அதில் குடியானவர்கள் வீதியில் ஒரு பழைய வீடு. அது அங்கு குடியிருப்பவர்களின் ஏழ்மையை எடுத்துக்காட்டிக்கொண்டிருந்தது. உள்ளே கயிற்றுக் கட்டிலில் ஒரு பெண் உருவம் படுத்திருந்தது. பக்கத்தில் 10-வயது பாலன் ஒருவன் கையில் கஞ்சியை வைத்துக்கொண்டு கட்டிலில் இருக்கும் உருவத்தை சாப்பிடும்படி அன்பாய் உபசரித்துக் கொண்டிருந்தான். ஆனால்

18996

அதற்கு பதில் விம்மலும், பெருமூச்சுமே கட்டிலில் இருந்து வந்து கொண்டிருந்தது.

இவர்கள்தான் பூஞ்சோலை கிராமத்தில் ஒரு காலத்தில் சிறப்பாக வாழ்ந்துவந்த கிராம முன்சீப் தனபாலன் அவர்களது பத்தினியும் ஏக புதல்வனுமாவார்கள். பையன் தேவராஜ் உள்ளூரில் உள்ள ஆரம்பப் பள்ளியில் 5-வது வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறான். அவனைத்தெரியாதார் அப் பள்ளியில் இல்லை. ஆசிரியரும் மாணவர்களும் அவனிடம் அன்பாய் இருந்தார்கள். எல்லாப் பாடத்திலும் அவனே முதல் பையன். சகல நற்குணங்களும் நிரம்பிய பக்திமிகுந்த சிறுவன். தினம் கோவிலுக்குப் போவதில் ஒருநாளும் தவறமாட்டான்.

அவனது தகப்பனார் பெரிய கொடையாளி, அன்பு மிகுந்தவர், ஈவு இரக்கம் உள்ளவர். ஏழைகளுக்கு தானமும், மற்றவர்களுக்கு உதவியும் செய்வதில் அவரை கர்ணன் என்றே சொல்லலாம். அப்பேர்பட்ட மனிதர் கடந்த வருடம்தான் இறந்துபோனார். அவருடைய சொத்துகள். கடன்காரரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர் உயிரோடிருக்கும்போது உற்றார், உறவினர்போல் நடித்தவர்கள் தற்போது அன்னியரைப்போல் விலகிக்கொண்டார்கள். ஒருநாள் வீட்டில் சாப்பாட்டுக்கு கஷ்டமாய் இருந்தபோது தன் கணவனிடம் வாய்தாவுக்கு 50 ரூபாய் கடன் வாங்கி இன்னும் கொடுக்காமல் இருந்த கடைசி வீட்டு தாத்தாவிடம் போய் ஒரு 10 ரூபாய் வாங்கிவரச்சொல்லி தாயார் தன் மகனை அனுப்பினாள். பையனை தாத்தா விரட்டி அனுப்பினதுதான் கண்ட பலன். "போடா உங்கப்பா இருக்கும்போதே திருப்பிக் கொடுத்துவிட்டேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

இதைப்போலவே மற்றவர்களும் தங்களது மோசத்தனத்தை ஆதரவு அற்ற இவர்களிடம் காட்டினார்கள். கையில் இருந்த நகைகளும் பணமும் சாப்பாட்டிற்காக செலவிடப்பட்டது. தற்போது கையில் ஜீவனத்துக்கு பணம் இல்லை. இதே வியாகுலத்தால் அந்த அம்மாள் வியாதியுற்று அதிக மோசமான நிலைக்கு வந்து தற்போது கஷ்டப்பட்டுக்கொண்டு கட்டிலில் கிடக்கிறாள். அவர்களது ஒரே ஆறுதல் அவ்வூரில் அவர்களை அடிக்கடி தேற்றிவந்த அந்த பங்கு குருவானவர்தான். இன்று தாயார் சாப்பிடாமல் அதிக கவலையோடு விம்மிக்கொண்டிருந்ததைக்கண்டு அந்த பாலன் உடனே குருவானவர் இடம் ஓடி அவரை அழைத்து வந்தான்.

குருவானவர் அந்த அம்மாள் அருகில் வந்து ஜெபம் செய்து தேற்றினார். பின்பு அந்த அம்மாள் வியாகுலப்படும் காரணத்தைக் கேட்டார். அதற்கு அந்த அம்மாள், "ஐயா, இன்றைய தினம் இதோ நிற்கும் என் மகன் பிறந்த நாள். இன்று என் கணவன் இருந்தால்

N45 163

என் வீடு எவ்வளவோ சந்தோஷகரம் நிரம்பியதாய் இருக்கும். ஆனால் இன்றோ என் மகன் கந்தலைக் கட்டிக்கொண்டும் நான் நிர்பாக்கியமாக இந்த கட்டிலில் படுத்திருப்பதையும் நினைத்து அதிக விசனமுற்றேன். நான் இன்னும் அதிகநாள் ஜீவித்திருக்கப்போவதில்லை. எனக்குப் பின் என் கண்மணியை யார் காப்பாற்றப்போகிறார்கள் என்ற வேதனை என்னை அதிகமாக துன்புறுத்துகிறது. நல்லவேளையாக நீங்கள் வந்தீர்கள். உங்கள் கையில் இவனை ஒப்புவிக்கிறேன். இவனை நீங்கள் தான் காப்பாற்றவேண்டும்" என்று சொல்லி அதிக களையால் படுக்கையில் சாய்ந்தாள். உடனே குருவானவர் அந்த அம்மாளை நோக்கி "தான் அந்த பையனை காப்பாற்றுவதாகவும், அந்த அம்மாளை யாதொன்றுக்கும் கவலைப்படாமல் கடவுளை நோக்கி ஜெபம் செய்யும் படியும்" சொல்லி தேற்றினார். இவைகளை கவனித்துக்கொண்டிருந்த பையன் அதிக கலக்கமுற்றான். இந்த நிகழ்ச்சி அவன் மனதில் அவன் ஜீவிய காலம் எல்லாம் பதிந்திருந்தது.

சிறிது நாட்களுக்குப்பின் அந்த அம்மாள் நிம்மதியாக இறைவனடி சேர்ந்தாள். குருவானவரே அந்த ஆத்மா சாந்தி அடைய செய்யவேண்டியவைகளை எல்லாம் செய்து பையனை தன் பாதுகாப்பில் ஏற்றுக்கொண்டு அவனை கலாசாலை கல்லூரிக்கு அனுப்பினார். பையன் தனது புத்தி சாதுரியத்தால் எல்லா வகுப்புகளிலும், எல்லா பாடங்களிலும் முதன்மையாகத்தேறி கலாசாலை கல்வியையும் முடித்து, கல்லூரி படிப்பையும் மாகாணத்துக்கே முதன்மையாகதேறி முடித்தான். இதனால் அரசாங்கத்தார் அவனை I. C. S. படிக்க சீர்மைக்கு தங்களது சொந்த செலவில் அனுப்பினார்கள். அப்பையன் கடவுள் கிருபையால் அதிலேயும் தேறி திரும்பி இந்தியா வந்து கலெக்டராக அநேக ஜில்லாக்களில் வேலை பார்த்தான். குருவானவரும் மனமகிழ்ந்து அவனுக்கு ஒரு நல்ல இடத்தில் மணம்முடித்து வைத்தார். இவன்தான் தற்போது கிருஷ்ணா ஜில்லா கலெக்டராக இருக்கும் Mr. D. ராஜ், I. C. S., அவர்கள்.

கலெக்டரின் பழைய நினைவுகள் இக்கட்டத்திற்கு வரும்போது தான் அவரது மனைவி அங்கு வந்து அவருடைய வளர்ப்புத் தந்தையாகிய சங். குருவானவர் பிள்ளையை ஆசீர்வதிக்க வந்திருப்பதை கூறினாள். உடனே கலெக்டர் தனது சிந்தனை கலைக்கப்பட்டவராய் அதிக துரிதமாய் எழுந்தோடி குருவானவரிடம் முழங்கால்படியிட்டு ஆசீர்வாதம் பெற்று அவரை வரவேற்று ஆசனத்தில் ஆனந்தத்தோடும் பக்தி விநயத்தோடும் அமரச்செய்தார். குருவானவரும் புன்முறுவலோடு ஒரு சிறு ஜெபம் செய்து அவர்களையும், பாலனையும் ஆசீர்வதித்து அவர்களோடு இனிது உரையாடிக்கொண்டிருந்தார்.

பேசும் நகரங்கள்

[ம. ஹென்றி. சாமுவேல், வீரகாலூர்]

(கும்மி மெட்டு)

நகரங்கள் : பாருக்குள்ளே எங்கள் பாரத தேசம் போல்
சீருற்ற தேசம் ஒன்றில்லையடி
பாரத நாட்டின் நல் பட்டினங்கள் யாவும்
பார்த்துக் களித்தின்றே நீ செல்லடி.

குமரிமுனை : இந்தியாவின் தெற்கு கோடியிலுள்ள நான்
இங்கிதமான குமரிமுனை
இந்து சமுத்திரம் என்னைத் தழுவியே
வந்து அடைவதை காண்பாயடி.

சென்னை : சென்னப்பனை தினம் என்றும் நினைத்திட
சென்னை யெனப் பெயர் வைத்தனரே
கல்வியிலே கரை கண்ட நகர் நானே
பல்வித பள்ளியை பாருங்சடி.

பம்பாய் : பணத்திலே பெயர் பெற்றேனடி கல்வி
மணத்திலே உயர்வுற்றேனடி
பம்பாய் துறைமுகம் காணுதடி அதோ
பற்பல கப்பல்கள் தோணுதடி.

கல்கத்தா : கல்கத்தா என்னும் துறைமுகமே பல
கப்பல்கள் தங்கிட வந்திடுமே
தாகூரைப் பெற்றதிவ் வங்காளமே — பலர்
* தாபரித்தாரிங்கே! § மங்களமே!

காசி : கங்கைநதி யிங்கே காணுதடி ஆஹா.
எங்கும் வளர்பச்சை தோணுதடி
இந்துக்களின் நகர் காசி இதுதாண்டி
இந்துக்கள் கோயில்களை எண்ணடி.

ஆக்ரா : தாஜ்மாலின் ஜோதியும் தோணுதடி மும்
தாஜ்மாலின் ஞாபகம் காணுதடி
ஷாஜானின் ஞாபக ஸ்தூபிகள் ஆக்ராவில்
சாஸ்வதமாக விளங்குதடி.

டில்லி : சட்டசபை இதோ தோணுதடி
சர்வஜனம் புகழ் டில்லியடி
பாரதத்தின் 'இந்த்ரபிரஸ்தம'ண்டி இது
† பாரதத்தின் தலை நகரடி.

---

* பிறந்தார். § மங்களமே என்பது 'அசைக்'காக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் தாகூர், போன்ற பல பிரபலஸ்தர் பிறந்ததற்கு மங்களம் சொல்ல வேண்டாமா? † இந்தியா.

கராச்சி : சிந்து நதி யிங்கே பாயுதடி—இன்னும்
†† இந்து பாலேவனம் தேயுதடி
விமானங்கள் யாவும் இங்குண்டடி—இன்னும்
விருத்தியடையும் கராச்சியடி.

[குறிப்பு :—ஒரு அன்னிய நாட்டுப் பெண்போல ஒருவனுக்கு உடுப்பு உடுத்த வேண்டும். பின்பு பாடசாலை தரையில் இந்தியா வின் தரைப்படம் வரைந்து மேற்கூறிய நகரங்கள் இருக்கும் இடத் தில் ஒவ்வொரு பையன்வீதம் நிறுத்திவைக்கவேண்டும். அன்னிய நாட்டுப் பெண் 'இலங்கை'யில் நின்றுகொண்டு "ஆஹா! என்ன செழுமை,—என்ன வளப்பம்—என்ன பசுமை! எத்தனை நகரங்கள்! இவைகளைப்பற்றி விளக்கி கூறுபவர் ஒருவருமில்லையா? என்று கூற வேண்டும் உடனே எட்டுநகரங்களும் "பாருக்குள்ளே............... நீ செல்லடி "வரையிலும் பாடவேண்டும். பின் உடனே வரிசை யாக குமரி...சென்னை...முறையே தங்கள் சரிதையை கூறவேண்டும். ஒவ்வொரு நகரமும் தன் சரிதையைக் கூறியவுடன் எல்லா நகரங்களும் சேர்ந்து "பாருக்குள்ளே எங்கள்......தேசம் ஒன்றில்லையடி" வரை பாடியவுடன் அடுத்த நகர் தன் சுயசரிதையை கூறவேண்டும். இப் படியாக இதை 'பெற்றோர்தினம்' பாடசாலைதினக்கொண்டாடத் தில் நடிக்கலாம். இப்படி இது "விளந்தைபோர்டு பெண்பாடசாலை யில் "நடிக்கப்பட்டு பரிக்ஷிக்கப்பட்டுவிட்டது. இன்னும் இதில் உங்கள் சொந்த அபிப்பிராயத்தில் மகத்தானதாக விளங்கும் நகரங் களையும் சேர்த்துக்கொள்ளலாம்.]

†† தார்பாலைவனம்.

யோசனைக் கணக்கு விடை

(கொத்து 36, மலர் 2, பக்கம் 21-ன் யோசனைக் கணக்கு)

விடை :—36 கிளிகள். ஷ விடையளித்தவர்கள் :—

1. S. Seetharaman, 2. A. S. Tharumanathan, Vellodu, 3. T. A. Mookkan, 4. I. Arputham, 5. K. Nagaratnam, H. M. Kallapalli Labour School, 6. D. Abraham, Teacher, Keela Michaelpatti.

கேள்வி கேட்கும் முறைகள்

(T. S. G.)

(கொத்து 36, மலர் 2, பக்கம் 30-ன் தொடர்ச்சி)

II. கேள்விகளின் இலட்சணங்கள்

I. தெளிவாயும், சுருக்கமாயும் இருத்தல் வேண்டும். கேள்விகள் சுருக்கமாயும், பொருள் எளிதில் புலப்படுவதாயும், அவற்றிற்கு வியாக்கியானம் தேவையிராதபடியாயும் அமைதல் வேண்டும்.

உதாரணமாக :—

(a) "ஒவ்வொரு பாகமும் நமக்கு உபயோகமுள்ளதும், உணவுக்கும், வியாபாரத்திற்கும் உதவுவதும், ஈரமுள்ளவிடத்திலேயே பயிராவதுமான செடி, விருக்ஷ வகையைச் சேராத தாவரம் எது? எப்படி?"

இக் கேள்வி வாழையைப்பற்றிய முதற் பாடத்தின் துவக்கம். இது நீண்டிருப்பதோடு தெளிவற்றும், இன்ன விடை என்று திட்டமாய்க்கூற முடியாதபடியும் கேட்கப்பட்டிருக்கிறதல்லவா? இதை ஏன் பின்வருமாறு பிரித்துப் பிரித்துக் கேட்கக்கூடாது?

கொடிக்காலில் பயிராகும் இரண்டு மூன்று முக்கியமான தாவரங்களைச் சொல். இப்பொழுது வாழையைப்பற்றி பார்ப்போம். அதைக் கொடிக்காலில் ஏன் பயிரிடுகிறார்கள்? வாழைக்கும், அகத்திக்கும் உள்ள வித்தியாசங்கள் கூறுக :—

1. உருவத்தில் — தோற்றத்தில் பூமிக்குமேல் உள்ள பாகம் — பூமிக்குள் மறைந்திருக்கும் பாகம், இவற்றைத் தொட்டுப் பார்த்தால்—பட்டையை உரித்துப் பார்த்தால்—வெட்டிப்பார்த்தால்.

2. ஒவ்வொரு பாகத்தின் உபயோகத்தை தெரிந்தமட்டில் சொல்லுக.

3. வெற்றிலைக்கொடி வளர்ந்து போவதையும், வாழை வளர்ந்து போவதையும் பார். அல்லது பார்த்ததிலிருந்து சொல். இதைப்போன்ற பற்பல சிறிய கேள்விகளைப் போடவேண்டும்.

(b) "மழைகாலத்தில் உங்களில் யாராவது ஒருவன் நகர்ப்புறத்திற்கோ, நாட்டுப்புறத்திற்கோ புறப்பட்டுச் சென்று குளம், குட்டை அல்லது கட்டுக்கடைத் தண்ணீர் தேங்கியிருக்கும் பள்ளம் முதலியவற்றைப் பார்க்கும்போது, அங்கே கட்டாயமாய்ச் சந்தேகமின்றி ஏராளமாய்க் காணப்படுபவை எவை?

தவளையைப்பற்றிய முதற் பாடமாம். இதில் "தவளை" என்ற விடை வரவழைக்க வேண்டுமாம். ஏனோ இவ்வளவு சுற்றல்? தவளைகளை எங்கே பார்த்திருக்கிறாய் என்று கேட்டால் என்ன? மழைகாலத்தில் தவளைகளின் சப்தம் அதிகமாய் ஏன் ஏற்படுகிறது என்றாற்போல் கேட்டால் என்ன தீங்கு?

(c) "அபரிமிதமான சீதோஷ்ண நிலைகளினின்றும் தப்பித்துப் பாதுகாத்துக்கொள்ளுமாறு தாவரங்களில் அமையும் விசேஷ மாறு பாடடைந்த தோற்றங்களைப் புலப்படுத்துக."

இந்தக் கேள்விகளுக்கு வியாக்கியானம் தேவை :—

இதை "கோடையின் உஷ்ணத்தால் செடிகள் காய்ந்து பட்டுப் போகாதபடி, தண்டு, இலை முதலிய பாகங்களில் காணப்படும் உறுப்புகள் யாவை?" என்று மாற்றிக்கேட்கத்தகும். (தொடரும்.)

யோசனைக் கணக்கு

(M. Henry Samuel.)

'R' என்னுமிடத்திலிருந்து ஒரு காரில் 4-50 மணிக்குப் புறப்பட்டேன். மணிக்கு 21-மைல் வேகத்தில் சில மணிநேரம் பிரயாணம் செய்த பின் பாதிதூரம் வந்ததையறிந்து 55 நிமிடம் இளைப்பாறினேன். மறுபடியும் 24-மைல் வேகத்தில் புறப்பட்டு 'S' என்னும் இடத்தை இரவு 8-45 மணிக்கு அடைந்தேன். R—S-க்கு இடையுள்ள தூரம் எவ்வளவு?

189996

"கோஹினூர்"

எழுதும்

புதிய தொடர் கதை

இருண்ட இதயம்

அடுத்த மாதம் முதல் பூங்கோத்தில் வெளிவரும்.

உலகத்தில் இருளும், ஒளியும் நேருவதுபோல உள்ளத்திலும் நேருகிறதன்றோ! ஆனால் என்னிதயத்தில் என்றுமே இருள்தானா?......ஆனால் ராஜமணியைப் பார்க்கும்போதுமட்டும் என் இருண்ட இதயத்தில் ஓர் மின்னல் வீசும் மர்மம் என்ன? பணம் பெரிதா? அன்பு பெரிதா? யார் யாருடைய இதயங்கள் இருள் அடைகிறது? பைத்தியக்காரன் யார்? காதலின் சக்தி என்ன?—இருண்ட இதயத்தில் படியுங்கள்!

விடுகதை விடைகள்

(கொத்து 36, மலர் 2, பக்கம் 32-ன் விடுகதைகள்)

விடை:—(1) பேன். (2) வெங்காயச்செடி. (3) புகை. (4) அடுப்பு; தணல்; சட்டி; சாதம். (5) கதவு. (6) நத்தை. (7) இருட்டு. ஷை விடையளித்தவர்கள்:—

1. Brigit, VIII Std., St. Joseph's Convent, Cheyur, 2. M. Packiam, E-2 A., 3. S. Raju, 4. K. Nagaretnam, H. M. 5. P. S. Mathalaimuthu, H. M. Palamaneri R. C. School.

(கொத்து 36, மலர் 2, பக்கம் 14-ன் விடுகதைகள்)

விடை:—(1) சோளம் (அ) கேழ்வரகு. (2) சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள். (3) மனிதன் வளர்ச்சிப் பருவம். (4) விராட்டி (எரு). (5) தேங்காய். (6) வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை.

"வானவில்"

[M. மரியலூயிஸ்]

இராகம்: ஹிந்துஸ்தான்] [ஏகதாளம்

நிரீஸ் நிரிஸ்நி தாநிஸ நிதபம
வானத்தில் தோன்றுதடி வில்லு . . நீயும்

பதநித நிஸநித பாபா ; ;
வனப்புடனே என்ன வென்று சொல்லு

பஸ்நிஸ தஸ்நிஸ நிஸரிஸ்நி தபம
என்னேரமும் தோன்றுதடி கண்ணே . . . .

பதநித நிஸநித பாபா ; ;
எந்தனுக்குச் செப்பிடு வாய் பெண்ணே.

(மற்ற அடிகளை இதேமாதிரி பாடவும்.)

2. ஊற்றுதடி ஓயாமல் தண்ணீர்
உரத்த சப்தத்துடனே கண்ணீர்—போல
அசடுபோலழுதிடும் நீயே
அடுத்தகணத்தில் சிரிப்பாயே.

3. அவ்வண்ணமே அழுதவானம்—வெட்கி
அதுதனக்கோரவமானம்
என்றெண்ணிக் காண்பிக்கும் பாரே—வானில்
எழில்மிகும் கதிரோனை நேரே.

Reg. No. M. 1534

4. காலைக்கஞ்சமலர்போல்தானே—கரும்
ககனம் விளக்கமுறும் மானே—இதோ
இந்திரஜாலம்போல அங்கே
இலங்குவது பாரினிதாய் அங்கே.

5. நின்புருவத்துடனே போட்டி—போட
நினைத்துப் பலவர்ணங்கள் தீட்டி
தன் அழகு புகழை நாட்டி
தலைமையுறப் போகுதடி காட்டி.

6. சூரியனுக்கெதிரில் பார்ப்பாய்
சுருதியொடு நீ பாடி ஆர்ப்பாய்
பாரில் பரன் படைத்தான் வில்லை—அழகில்
பக்கம் நின்று வெல்ல வேறில்லை.

7. எழுவர்ணங்களதற்குண்டு—அங்கு
எறிட்டு நீயுமதைக் கண்டு
அக்களிப்புடன் ஆடுவாயே—பாப்பா
அகமகிழ்ந்து நீ பாடுவாயே.

8. அர்த்தமென்ன தெரியுமோடி—அதை
அடுத்து மழையும் வராதேடி
அடுத்த நின் சேடியர்க்குக்கூறி—நீயும்
ஆனந்தமாய் ஆடு தண்ணீர் வாரி.

9. சிறிது நேரமே அங்கு தங்கி—அது
சிறப்புடனே மெதுவாய் மங்கி
செடி மறைந்திடுமே பாப்பா—மயங்கி
ஓலமிட்டழாதேடி நல் பாப்பா.

10. இந்த வில்லிற்கு அம்பு கிடையாது—அதை
இழுக்க முடியாதுடையாது
சிந்தித்துப் பெயர் தனைச் சொல்லு—இலையேல்
சிரித்துரைப்பேனே "வானவில்லு"

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. Ty.—I, 11—9—1945.